**அமெரிக்கத் தூதுவர் திரு. அதுல் கேஷப் அவர்களின் உரை**

**இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம், கொழும்பு**

**இலங்கை அமெரிக்க மிஷனின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா**

**புனித பவுல்ஸ் தேவாலயம், மிலாகிரிய, 2016, ஒக்ரோபர் 31 ஆம் திகதி.**

*தயாரித்ததன் பிரகாரம்:*

- உலகளாவிய இணை நிர்வாக சபையின் தலைமைப் பாதிரியார் வணக்கத்திற்குரிய தந்தை கலாநிதி ஜேம்ஸ் மூஸ் அவர்களே!
- உலகளாவிய சபையின் தென்னாசியாவிற்கான பிராந்திய தலைமைப் பாதிரியார் வணக்கத்திற்குரிய தந்தை கலாநிதி. தீனபந்து மஞ்சள அவர்களே!
- சபையின் தலைவர் வணக்கத்திற்குரிய தந்தை தேவசகாயம் தேவநேசன் அவர்களே!
- கொழும்பு அங்கலிக்கன் சபையின் முன்னாள் பேராயர் வணக்கத்திற்குரிய தந்தை துலிப் த சிக்கேரா அவர்களே!
- இலங்கை மெதடிஸ்ற் திருச்சபை மாநாட்டின் தலைவர் வணக்கத்திற்குரிய தந்தை ஆசிரி பீ. பெரேரா அவர்களே!
- இலங்கை விவிலிய சமூகத்தின் பொதுச் செயலாளர் திருமதி. லக்ஷானி பெர்ணான்டோ அவர்களே!
- வணக்கத்திற்குரிய தந்தை ஏ. பீ, தேவதாஸ் அவர்களே!
- தேவாலயங்களின் மதத் தலைவர்களே, மதகுருமார்களே, மற்றும் நண்பர்களே!

இலங்கை அமெரிக்க மிஷனின் ஸ்தாபக தினத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு தரிசிக்கும்படியாக இன்று நான் உங்களுடன் இருப்பது எனக்குக் கிடைத்த பெரியதொரு வாய்ப்பாக எண்ணி மகிழ்கின்றேன். இன்று இங்கே இலங்கை அமெரிக்க மிஷனின் இருநூறாவது ஆண்டு விழாவினை ஒழுங்கு செய்து நடாத்திய உங்கள் ஒவ்வொருவருக்கும் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கைக்கான கொழும்புத் தூதரகத்தின் சார்பில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணக்கத்திற்குரிய தந்தை சாமுவேல் நிவ்வேல் என்பவர் இலங்கையிலுள்ள முதலாவது அமெரிக்க மிஷனரிமார்களில் ஒருவராகவும் புதிய இங்கிலாந்தின் மதகுருவாகவும் விளங்கியவர். 1816 இல் கல்விசார் நிறுவனங்களை நிறுவுவதற்காக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வருகை தந்த அமெரிக்க மிஷனரிமார்களின் முன்னோடிகளில் ஒருவராக நிவ்வேல் விளங்குகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இல்லத்திலிருந்து தொலை தூரம் வரை, மகத்தான சுய தியாக மனப்பான்மையுடன் இந்த மிஷனரிக் குடும்பங்கள் வேதாகமத்தின் அறிவினைப் பரப்புகின்றன.

ஆனால், மக்களுக்கு வேண்டிய நடைமுறைசார் நன்மைகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக அம்மக்களுடனேயே வாழ்ந்து சேவையாற்றியவர்களைத் தேடிப் பார்த்தால் அமெரிக்கர்களின் வழிமுறைகளில் ஒப்பற்றவர்கள் இல்லை எனலாம்.

ஐக்கிய அமெரிக்காவின் துரித அபிவிருத்தியில் முக்கியமான ஒரு காரணியாகக் கல்வித்துறை விளங்கிய காலகட்டத்தில், அமெரிக்க மிஷனரிமார்கள் மக்களின் வாழ்க்கையில் அனைத்து விடயங்களிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும், வறுமை நிலையை நீக்குவதற்காகவும், சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவும் வகையிலும் யாழ் குடாநாடு முழுவதும் பாடசாலைகளை நிறுவுதலே முறையானது என நம்பினர். 1816 இல் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் முதலாவது அமெரிக்க மிஷனரிப் பாடசாலை திறக்கப்பட்டது தொடக்கம் 1848 இலிருந்து நூற்றி ஐந்து தமிழ்ப் பாடசாலைகளும் பதினாறு ஆங்கிலப் பாடசாலைகளும் திறக்கப்பட்டன. 1823 இல் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் பற்றிக்கோட்டா செமினரி ஒன்றினை அமெரிக்க மிஷனரிமார்கள் வணக்கத்திற்குரிய தந்தை கலாநிதி டானியல் பூர் என்பவருடன் இணைந்து நிறுவியதுடன், அவரே அப்பாடசாலையின் முதலாவது அதிபராகவும் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, தீவிரவாதக் கருத்துக்கள் அடக்கப்பட்டு பெண்களிற்கான கல்வி கற்கும் வாய்ப்புக்களை வழங்குவதற்காகப் பல முக்கிய படிமுறைகளையும் கூட புதிய ஆங்கிலேயர்கள் மேற்கொண்டுள்ளனர். 1824 இல் திருமதி. ஹரியெற் வின்ஸ்லோ என்பவர் ஆசியாவில் பெண்கள் விடுதியோடு கூடிய முதலாவது பாடசாலையாக உடுவில் மகளிர் கல்லூரியை நிறுவினார். அமெரிக்க மிஷனரிமார்கள் 1820 இல் முதலாவது அச்சியந்திரசாலை ஒன்றினை நிறுவியதுடன், 1841 இல் நாட்டின் இரண்டாவது பழம்பெரும் பத்திரிகையான ‘உதயதாரகை’ என்ற பத்திரிகையையும் வெளியிட்டார்கள்.

என் அன்பிற்குரியவர்களே! இந்த இருநூறாவது ஆண்டு நிறைவு விழாவானது சரியான நேரத்தில் பணியாற்றியவர்களை ஞாபகப்படுத்தும் வகையில் அமெரிக்க மிஷனரிமார்கள், புலமையாளர்கள், வர்த்தகர்கள், உல்லாசப் பிரயாணிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்கள் ஆகியோரை மக்களோடு மக்களாக இணைக்கும் ஒரு கொண்டாட்ட வைபவ நிகழ்வாக இந்நிகழ்வு அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நீங்களும் நான் கூறும் கருத்தை ஆமோதிப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். ஐக்கிய அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள உறவுநிலைக்கான உறுதிப்பாட்டின் பலம் வாய்ந்ததொரு அஸ்திவாரமாக மக்களோடு மக்களாக இணைக்கும் ஒரு கொண்டாட்ட வைபவ நிகழ்வாக இந்நிகழ்வு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1948 தொடக்கம் ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தில் சேவையாற்றிய அனைத்து ஆண்களும் பெண்களும் கல்விசார் நிறுவனங்களை நிறுவிய முதலாவது மிஷனரிமார்களின் இருநூறாவது ஆண்டு விழாவிற்கான பரம்பரைச் சொத்தாக இருக்கின்றார்கள் என்பதுடன் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கும் பரஸ்பர அனுகூலமான பங்குடைமையாகவும் இந்நிகழ்வு விளங்குகின்றது.

அமெரிக்காவின் பிரசித்த எழுத்தாளர் மார்க் ருவைன் 1896 இல் இலங்கைக்கான தனது விஜயத்தின் போது கூறியதை நான் இங்கு உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். “என்ன ஒரு கனவு

அது, அந்த மலர்களும் மலர்க் கொத்துக்களும் வெப்ப மண்டலத்திற்குரிய பிரகாசமான ஒளியாக விளங்கின. அவற்றினூடாக மிதவெப்பமான தென்றல் காற்று இலங்கைத் தீவினை மெதுவாக வருடிக்கொண்டிருக்கின்றது.''

நண்பர்களே! இந்நாட்களில் இலங்கையில் இத்தகைய புதிய தென்றல் காற்று வீசுவது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுநிலைகளிற்கான ஒரு புதிய எதிர்பார்ப்புள்ள நேரமாக இது விளங்குகின்றது. சாத்தியப்பாடான நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒருங்கிணைவையும் ஒரு நிரந்தரமான வாழ்நாள் சமாதானத்தையும் அடைந்து கொள்வதற்காக இந்நாட்டு அரசாங்கத்துடனும் மக்களுடனும் இணைந்து பணியாற்றுவதற்கு எமது தூதரகம் பொறுப்புடையதாக உள்ளது.

இது மிகவும் கடுமையான பணிசார் குறிக்கோள் என்பது எமக்குத் தெரியும் ஆயினும் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி அவர்கள் கடந்த மே மாதம் கொழும்பில் பின்வருமாறு கூறினார். ''யுத்தமின்மையைக் காட்டிலும் உண்மையான நிரந்தர சமாதானம் மேலானது. விசேஷமாக இன முரண்பாட்டிற்குப் பின்னர் உள்ள உண்மையான நிரந்தர சமாதானம், அத்தியாவசியமான கொள்கைகள், உருவாக்கப்பட்ட நல்லிணக்கச் செயற்பாடுகள் மனக்கசப்பாக இருக்கவில்லை. நாட்டின் அனைத்து மக்களும் சமவுரிமையுடனும் சம அந்தஸ்துடனும் நடத்தப்பட வேண்டும் எனவும் எவரேனும் விலக்கப்பட்டவர்களாகவும் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகவும் உணரக்கூடாது என்பதனையும் இது கோருகின்றது. காவல்துறையினரை உள்நோக்கியதாக அல்லாமல் இராணுவத்திடம் செயற்றிட்டங்களையும் அவற்றின் அதிகாரங்களையும் வெளிப்படையாகத் தமது மக்களைப் பாதுகாத்தல் தொடர்பாக அழைப்பு விடுக்கின்றது. அமெரிக்காவின் மிகப் பெருந்தலைவரான ஆபிரகாம் லிங்கன் நாட்டின் ரணங்களைக் குரோதத்துடன் கட்டிக்காத்தல் என்பது எதனையும் நோக்கியதாக அமையாது அனைத்தையும் நோக்கிய இரக்கத்துடன் கட்டுதலே சிறந்ததாகும் என்று கூறினார்.[1]

இந்தவகையில் இறுதியாக, ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை மக்களிற்கு இடையே இத்தகையதொரு உறவுநிலைக்கான உறுதிப்பாடு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்திருந்ததன் உண்மையை பல வழிகளில் சுட்டிக்காட்டுவதற்கு இத்தகையதோர் ஆன்மீக நிகழ்வில் ஐக்கிய அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுநிலைகளின் உறுதிப்பாட்டின் உண்மையான ஆரம்பத்திற்கான பல்வேறு வழிகளை அடையாளப்படுத்துவதற்கு இங்கே என்னையும் இன்றைய நிகழ்வில் பங்குபற்றுவதற்கு அனுமதியளித்த இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மற்றும் இந்நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி! வணக்கம்!.

[1] http://www.state.gov/secretary/remarks/2015/05/241421.htm,accessed10/26/16